بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *13/03/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# இறை ஏகத்துவத்தின் பின்னணியில் ஈமானை வலுப்படுத்தக்கூடிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து இரு வாரங்களுக்கு முன்புள்ள குத்பாவில் (கூறும்போது), ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் அன்னார் கொண்டிருந்த துடிப்பு பற்றி எடுத்துரைத்திருந்தேன். இந்த நோக்கத்தை நிலைநாட்டவே அன்னார் இவ்வுலகிற்கு வந்தார்கள். இதனை அன்னாரின் சொல் மற்றும் செயல்கள் மூலம் நாம் காண்பது மட்டுமன்றி, அன்னாருடைய சஹாபிகள் மற்றும் அன்னாரைப் பின்பற்றக்கூடியவர்களிடத்திலும் ஏகத்துவத்திற்காக எல்லாவித தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் எத்தகைய ஓர் ஆன்மாவை அன்னார் ஊட்டியிருந்தார்கள் என்றால், அதற்கு இணையான உதாரணத்தை எங்கும் காண முடியாது.

இன்றைய தினமும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் இதே அம்சம் குறித்தே எடுத்துரைப்பேன். இதில் சில ஸஹாபிகளின் தியாகங்கள் பற்றிய குறிப்புகளும் இடம்பெறும்.

ஒருமுறை முஷ்ரிக்குகள் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், எங்கள் தெய்வங்களைக் குறித்து நீங்கள் இவ்வாறு கூறினீர்கள்தானே என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் "ஆம்" என்று பதிலளித்தார்கள். உடனே அவர்கள் அன்னாரைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று, உமது நண்பரின் நிலையைச் சென்று பாரும் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனே புறப்பட்டு மஸ்ஜித் ஹராமை வந்தடைந்தார்கள். அங்கு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மக்கள் சுற்றி வளைத்திருப்பதை அவர்கள் கண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அம்மக்களிடம்), உங்களுக்குக் கேடு உண்டாகட்டும் என்று கூறிவிட்டு, اَتَقۡتُلُوۡنَ رَجُلًا اَنۡ یَّقُوۡلَ رَبِّیَ اللّٰہُ وَقَدۡ جَآءَکُمۡ بِالۡبَیِّنٰتِ مِنۡ رَّبِّکُمۡ

“என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளை கொண்டு வந்துள்ளார்” என்று கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் அவர்கள் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட்டுவிட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கிப் பாய்ந்து அவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா

(ரலி) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களிடம் வந்தபோது, அவர்கள் தம் தலைமுடியைத் தொட்டால் அது கையில் வந்துவிடும் நிலையில் இருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** “ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, மக்கத்து தீயவர்களின் ஒரு கூட்டம் அன்னாரைச் சுற்றி வளைத்துக் கொண்டது. ‘மக்களே! இதோ இவர்தான் தன்னை நபி என்று கூறுகிறார்’ என்று ஏளனம் செய்தவாறு வழிநெடுகிலும் அன்னாரின் பிடரியில் அடித்துக்கொண்டே வந்தார்கள். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து அன்னாரின் வீட்டிற்குள் தொடர்ந்து கற்கள் எறியப்பட்டன. அசுத்தமான பொருட்கள் அன்னாரின் வீட்டிற்குள் எறியப்பட்டன. உணவு சமைக்கும் இடங்களில்கூட அசுத்தமான பொருட்கள் வீசப்பட்டன. ஆனால், ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அன்னாரின் உள்ளத்தில் அலைமோதிய அந்த துடிப்பு ஒரு கணமும் குறையவில்லை; அதற்காக அன்னார் மீது பல்லாயிரக்கணக்கான ஸலவாத்துகள் உண்டாகட்டும்! அத்தகு இன்னல்களையும் அன்னார் மிகுந்த மனமகிழ்வோடும் மனநிறைவோடும் ஏற்றுக் கொண்டார்கள். இவ்வளவு நடந்த பிறகும்கூட, மனிதகுலத்தின் மீதான அன்னாரின் அன்பிலும் கருணையிலும் கடுகளவும் குறைவு ஏற்படவில்லை.”

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜித் ஹராமில் நின்று கொண்டு மக்காவின் முஷ்ரிக்குகளை நோக்கி, "லா இலாஹ இல்லல்லாஹ்" அதாவது, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று கூறுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் குறைஷிகள் அன்னார் மீது பாய்ந்தார்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அபீ ஹாலா (ரலி) அவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முதலாக வந்தடைந்தார்கள். ஹாரிஸ் (ரலி) அவர்கள் அன்னாரைக் காப்பதற்காக அந்த மக்களுடன் சண்டையிட்டு அம்மக்களை அன்னாரிடமிருந்து அப்புறப்படுத்தினார்கள். அதன் பிறகு அம்மக்கள் அனைவரும் ஹாரிஸ் (ரலி) அவர்கள் மீது பாய்ந்து அவர்களை ஷஹீத் ஆக்கி விட்டார்கள்.

மக்காவின் காஃபிர்கள் அன்னாரையும் அன்னாரின் குடும்பத்தாரையும் 'ஷிஃ-பே அபீ தாலிப்' (எனும் பள்ளத்தாக்கி)ல் மூன்று ஆண்டுகள் எவ்வாறு சிறை வைத்தனர் என்றால், அனைத்து வகையான சமூகப் புறக்கணிப்புகளும் அவர்கள் மீது செய்யப்பட்டன. அந்தத் தடை நீங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னரை விட அதிகமாக ஏகத்துவப் பிரச்சாரத்தை பரவலாக செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாயிஃப் பயணமும் ஒரு புகழ்பெற்ற சம்பவமாகும். அங்கு அன்னார் மீது செய்யப்பட்ட அநீதிகள் வரலாற்றில் பல்வேறு விதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** “ஷிஃ-பே அபீ தாலிப் முற்றுகை விலகியதும் தாயிஃப் நகருக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாடினார்கள். அன்னார் தாயிஃபில் பத்து நாட்கள் தங்கி, நகரின் பல தலைவர்களை அடுத்தடுத்துச் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் மக்காவைப் போலவே அந்நகரத்தின் தலையெழுத்திலும் அப்போது யாரும் ஈமான் கொள்வது விதிக்கப்பட்டிருக்கவில்லை. அப்போது எவரும் ஈமான் கொள்ளவில்லை. இறுதியாக, அன்னார் தாயிஃபின் பெருந்தலைவனிடம் சென்று இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அவனும் அதனை தெளிவாக

நிராகரித்ததோடு, நீர் இங்கிருந்து செல்வதே நல்லது என்று கூறினான். அதன் பின்னர், அந்தத் துரதிஷ்டசாலி நகரின் தீயவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் ஏவிவிட்டான். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் கூச்சலிட்டுக் கொண்டே வந்து கற்களை வீசத் தொடங்கினர். அதனால் அன்னாரின் உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்தது.

தாயிஃபிலிருந்து மூன்று மைல் தொலைவில் மக்காவின் தலைவனான உத்பா பின் ரபீஆவின் தோட்டம் ஒன்று இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அத்தோட்டத்திற்குள் சென்று தஞ்சம் புகுந்தார்கள்; அநீதியிழைத்த அம்மக்கள் களைப்படைந்து திரும்பிச் சென்றனர். உத்பா, அத்தாஸ் எனும் தனது கிறிஸ்தவ அடிமையின் மூலமாக ஒரு தட்டில் சில திராட்சைப் பழங்களை வைத்து அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அத்தாஸிடம் அவரது பெயரையும் ஊரையும் கேட்டார்கள். அவர், நான் நினிவே நகரத்தைச் சேர்ந்தவன் என்றார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உமது ஊரில் தோன்றிய இறைத்தூதர் யூனுஸ் பின் மத்தேயு (அலை) அவர்களின் சகோதரன் ஆவேன் என்று கூறினார்கள். சிறிது நேரம் அந்தத் தோட்டத்தில் ஓய்வெடுத்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக மக்காவில் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் தமது பிரச்சாரக் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். அன்னார் அரேபியாவின் சந்தைகளுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்கு, இணையற்ற ஏக இறைவனின் பக்கம் வருவதற்கு செய்தி கொடுப்பார்கள். மக்காவிற்கு வெளியே பல்வேறு இடங்களில் மக்கள் ஒன்று கூடுவார்கள்; அவை 'அஸ்வாகுல் அரப்' (அரபுச் சந்தைகள்) என்று அழைக்கப்பட்டன. அவற்றுள் உக்காஸ் عكاظ, மஜன்னா مجنة மற்றும் ஸுல் மஜாஸ் ذوالمجاز ஆகியவை குறைஷிகள் மற்றும் அரபுகளின் சந்தைகளாக இருந்தன. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுடைய நாட்களில் உக்காஸ் மற்றும் மஜன்னா சந்தைகளுக்குச் சென்று அங்குள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் தங்குமிடங்களுக்கும் தேடிச் சென்று மக்களுக்கு அழைப்பு விடுப்பார்கள். 'எனது இறைவனின் செய்தியை எடுத்துரைக்க எனக்குத் தஞ்சம் அளிப்பவர் யார்? எனக்கு உதவக் கூடியவர் யார்?' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வினவுவார்கள்.

மக்காவின் குறைஷிகள் ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இஸ்லாமியப் பிரச்சாரத்திலிருந்து தடுக்க முயன்றனர்; மறுபுறம் இஸ்லாத்தை ஏற்றவர்கள் மீது எவ்வாறான மிகக் கொடிய அநீதிகளையும் மிருகத்தனமான கொடுமைகளையும் அரங்கேற்றினர் என்றால், அதை விவரிப்பதற்கு பேனாவுக்கு கூட வலிமையில்லை. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஈமான் கொண்ட போது, அவர்களது எஜமான் அவர்களைப் பிடித்துத் தரையில் கிடத்தி, அவர்கள் மீது கற்களையும் பசுவின் தோலையும் போட்டு அழுத்தினான். உமது இறைவன் லாத் மற்றும் உஸ்ஸா தான் என்று அவன் கூறினான். ஆனால் அவர்கள் அப்போதும் 'அஹத், அஹத்' (இறைவன் ஒருவன், இறைவன் ஒருவன்) என்றே கூறி வந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை ஏழு ஊக்கியா அதாவது 280 திர்ஹம்கள் கொடுத்து விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள்.

மக்கத்து குறைஷிகள் முஸ்லிம்களைத் துன்புறுத்தியது மட்டுமன்றி, ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களையும் விட்டுவைக்கவில்லை. அனைவரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே மிகக் கடுமையான துன்பங்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டார்கள். 'முஹம்மது' (அதிகமாக புகழப்பட்டவர்) என்ற அன்னாரின் பெயரைச் சிதைத்து, 'முஸம்மம்' (அதிகமாக இகழப்பட்டவர்) என்று அவர்கள் அழைத்தனர் - நவூதுபில்லாஹ். அன்னாரைப் பெரும் பொய்யர் என்றும், மோசடி செய்பவர், பேராசைக்காரர், ஏமாற்றுக்காரர் என்றும் பழித்தனர். அன்னார் மீது கற்களை வீசினர். சில நேரங்களில் அசுத்தமான பொருட்களையும் எறிந்தனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய இந்த இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக! அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. உண்மையைக் கண்டறிய வேண்டிய முறையில் அவருடைய உயர் அந்தஸ்து கண்டறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து காணாமல் போன அந்த ஏகத்துவத்தை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

அவரே ஒவ்வோர் அருளுக்கும் தலையூற்றாக விளங்குகிறார். அவரது அருளைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொள்ளாமல் எவராவது ஒரு சிறப்பை உரிமை கொண்டாடினால், அவர் மனிதர் அல்ல; மாறாக ஷைத்தானின் சந்ததி ஆவார். ஏனெனில், ஒவ்வொரு சிறப்பிற்கும் உரிய திறவுகோல் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஞானத்தின் பொக்கிஷமும் அவருக்கு அருளப்பட்டுள்ளது. அவர் மூலமாகப் பெறாதவன் நித்திய இழப்பிற்குள்ளானவன் ஆவான். நாம் என்ன? நமது உண்மை நிலை என்ன? இந்த நபியின் மூலமாகவே நாம் உண்மையான ஏகத்துவத்தைப் பெற்றோம்; உயிருள்ள இறைவனைப் பற்றிய ஞானம் இந்த முழுமையான நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவுமே நமக்குக் கிடைத்தது என்று நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் நன்றி மறந்தவர்களாகிவிடுவோம். இறைவனின் முகத்தைக் காண்பதற்கு உதவும் அவனது உரையாடல்களைப் பெறும் நற்பேறைப் பெறுவதற்கும் இந்த கண்ணியத்திற்குரிய நபியே காரணமாக இருந்தார். நேர்வழி எனும் இந்தச் சூரியனின் கதிர்கள் நம் மீது விழுகின்றன; நாம் அவருக்கு முன்னால் நிற்கும் வரை மட்டுமே ஒளியுடன் இருக்க முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளாதவரோ அல்லது மார்க்கத்தை விட்டு விலகியவரோ, ஏகத்துவத்தில் நிலைத்திருந்து அல்லாஹ்வை இணையற்ற ஏகன் என்று அறிந்து கொண்டால் அவரும் இரட்சிப்பு பெற்றுவிடுவார் என்றும், ஈமான் கொள்ளாததாலோ அல்லது முர்தத் ஆனதாலோ அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் எவர்கள் இந்தத் தவறான எண்ணத்தில் பிடிவாதமாக

இருக்கிறார்களோ, அத்தகையவர்கள் உண்மையில் ஏகத்துவத்தின் உண்மையை பற்றியே அறியாதவர்கள் ஆவர். வெறுமனே இறைவனை ஏகன் என்று மட்டும் கருதுவதால் இரட்சிப்பு கிடைத்துவிடாது; மாறாக, இரட்சிப்பு என்பது இரண்டு விஷயங்களைப் பொறுத்தே அமைகின்றது.

1. முழுமையான உறுதியுடன் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவனது ஏகத்துவத்தின் மீது ஈமான் கொள்ள வேண்டும். 2. அந்த ஏக இறைவனின் மீதான முழுமையான நேசம் ஒருவரது உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிய வேண்டும் என்றால், அதன் ஆதிக்கத்தினால் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதலே அவரது உயிருக்கு நிம்மதி தரக்கூடியதாக மாற வேண்டும்; அவனின்றி அவரால் வாழவே முடியாது என்ற நிலை ஏற்பட வேண்டும். அவனது நேசம் அவனையன்றியுள்ள அனைத்து நேசங்களையும் அழித்துவிட வேண்டும். இத்தகைய உண்மையான ஏகத்துவம், நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எதன் மூலமும் கிடைக்கவே முடியாது. ஏன் கிடைக்க முடியாது? இதற்கான பதில் என்னவென்றால், இறைவனது இருப்பு மறைவிலும் மறைவானதும், எட்ட முடியாததற்கும் அப்பாற்பட்டதும், மிகவும் நுட்பமானதும் ஆகும்; மனித அறிவு அதனை தனது சுய ஆற்றலால் மட்டும் கண்டறிய முடியாது. எந்தவொரு அறிவுப்பூர்வமான சான்றும் இறை இருப்பிற்கு அறுதியான சான்றாக முடியாது. ஏனெனில், அறிவின் ஓட்டமும் முயற்சியும், இவ்வுலகின் படைப்புகளைக் கண்டு ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்ற தேவையை உணர்வதுடன் நின்றுவிடும். ஆனால் ஒரு தேவையை உணர்வது என்பது வேறு; அந்த இறைவன் உண்மையில் இருக்கிறான் என்ற நிச்சய உறுதி நிலையை அடைவது என்பது வேறு விஷயமாகும். .....எனவே, உண்மையான ஏகத்துவம் நபியின் வாயிலாக மட்டுமே கிடைக்கும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்."

ஆகவே, நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான நேசம் கொள்ள வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரை ஏகத்துவத்தை நிலைநாட்டவே அல்லாஹ் அனுப்பியுள்ளான்; நாம் அன்னாரிடம் பைஅத் செய்துள்ளோம். எனவே நாம் இதற்கான உரிமையை செலுத்தக்கூடியவர்களாக ஆக வேண்டும் என முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதில் நாம் முன்னணியில் திகழ ரமலான் நாட்களில் நாம் குறிப்பாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள்; அவர்கள் உண்மையான ஏகத்துவத்தை உணர்ந்து அதன்படி செயல்படக்கூடியவர்களாக ஆக வேண்டும் என்று.

*இறுதியாக, ஹுஸூர் அவர்கள் நைஜீரியாவின் ஜமாஅத் முரப்பி மதிப்பிற்குரிய ஸிக்ருல்லாஹ் தாயோ அய்யூப் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகை நடத்தப் போவதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)